புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • பிப்ரவரி 22, 2024 • புரட்சி 24 • முழக்கம் 06 • விலை ரூ.3.00


# 200 நிறுவனங்களில் ஓ.பி.சி. எஸ்.சி-க்கு சொந்தமாக ஒன்றுகூட இல்லை : ராகுல் காந்தி

‘நாட்டின் மக்கள்தொகையில் 73 விழுக்காடு பேர் ஓ.பி.சி, எஸ்.சி., எஸ்.டி. பிரிவினராக இருந்தாலும், முதல் 200 நிறுவனங்களில் ஒன்று கூட அவர்களுக்கு சொந்தமானதாக இல்லை’ என ராகுல் காந்தி கூறியுள்ளார். உத்தரப் பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் பிப்ரவரி 18ஆம் தேதி இந்திய ஒற்றுமை நீதி யாத்திரையை மேற்கொண்ட காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி பேசியதாவது:


சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு என்பது நாட்டின் எக்ஸ்ரே. அதுதான் எல்லாவற்றையும் வெளிப்படுத்தும். சாதிவாரி கணக்கெடுப்பு இளைஞர்களின் ஆயுதம். அதன்மூலம் தான் உங்கள் மக்கள்தொகை என்ன என்பதை நீங்கள் கண்டுபிடிக்க முடியும். நாட்டின் செல்வத்தில் உங்கள் பங்கு என்ன என்பதை அறிய முடியும். தற்போது நாட்டில் ஓ.பி.சி. வகுப்பினர் 50 விழுக்காடு, தாழ்த்தப்பட்டவர்கள் 15 விழுக்காடு, பழங்குடியினர் 8 விழுக்காடு உள்ளனர். இவர்களின் மொத்த மக்கள் தொகை 73 விழுக்காடு. ஆனால் நாட்டில் உள்ள முதல் 200 நிறுவனங்களில் ஒன்று கூட ஓ.பி.சி. அல்லது தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு சொந்தமானதாக இல்லை. நாட்டின் உயர்மட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் 90 பேரில் வெறும் 3 பேர்தான் உங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள். ஊடகத்துறையில் ஒருவர் கூட இல்லை. உங்களைப் போன்ற இளைஞர்களுக்கு இந்த நாட்டில் எதிர்காலம் இல்லை.



அயோத்தி ராமர் கோயில் குடமுழுக்கு விழாவில் ஓ.பி.சி. அல்லது பழங்குடியினர் பிரிவைச் சேர்ந்த ஒருவர் கூட இல்லை. பெரிய தொழிலாளர்கள் பத்து, பதினைந்து பேரின் ரூ.14 லட்சம் கோடி கடனை தள்ளுபடி செய்யும் அரசு, விவசாயிகளின் கடனை ஒருபோதும் தள்ளுபடி செய்யவில்லை. தொழிலதிபர்கள் லட்சக்கணக்கான கோடி ரூபாயை ஒரு நிமிடத்தில் வங்கியில் கடன் பெறுகின்றனர். ஆனால், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் துரத்தி அடிக்கப்படுகிறார்கள். இவ்வாறு அவர் பேசினார்.

# ‘திராவிட மாடல் ஆட்சி’யின் ஈராண்டு சாதனைகள் - பட்டியலிட்ட முதலமைச்சர்

சட்டப்பேரவையில் பிப்ரவரி 15-ஆம் தேதி ஆளுநர் உரை மீதான விவாதத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு கடந்த இரண்டரை ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள், அவற்றால் ஏற்பட்ட பலன்கள் குறித்து முதலமைச்சர் ஆற்றிய உரையில் இருந்து சில பகுதிகளைக் காணலாம்.



- இந்தியாவின் பொருளாதாரத்துக்கு 9 விழுக்காடு பங்கைத் தருகிறது தமிழ்நாட்டின் பொருளாதார வளம்! இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அளவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது; ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சி 7.24 விழுக்காடாக இருக்கும்போது தமிழ்நாட்டின் வளர்ச்சியானது 8.19 விழுக்காடாக உயர்ந்துள்ளது! இந்திய அளவில் பணவீக்கமானது 6.65 விழுக்காடாக இருக்கும்போது, தமிழ்நாட்டில் அது 5.97 விழுக்காடாக குறைந்து உள்ளது!

- ஏற்றுமதி தயார் நிலைக் குறியீட்டில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது! மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கிறது! தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக 14-ஆவது இடத்தில் இருந்த தமிழ்நாட்டை 3-ஆவது இடத்துக்கு உயர்த்தி உள்ளோம்! கல்வியில் இரண்டாவது இடத்துக்குத் தமிழ்நாட்டை உயர்த்தியுள்ளோம். புத்தாக்கத் தொழில்கள் (ஸ்டார்ட் அப்) வரிசையில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளோம்.

- “கலைஞர் மகளிர் உரிமைத் தொகை”யாக ஒரு கோடியே 15 லட்சத்து 16 ஆயிரத்து 292 மகளிர் மாதந்தோறும் ரூ.1,000 பெறுகிறார்கள். “விடியல்” பேருந்து பயணத் திட்டம் மூலமாக 445 கோடி முறை பயணித்து பெண்கள் பயனடைந்து இருக்கிறார்கள். “மக்களைத் தேடி மருத்துவம்” திட்டத்தால் பயனடைந்தவர்கள் ஒரு கோடி பேர். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் 16 லட்சம் பிள்ளைகள் வயிறார உணவு உண்கிறார்கள். நகைக்கடன் தள்ளுபடி பெற்றவர்கள் 13 லட்சத்து 12 ஆயிரம் பேர். கூட்டுறவுக் கடன் தள்ளுபடி பெற்றவர்கள் 1 லட்சம் பேர்.

- மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் “புதுமைப் பெண்” திட்டப்படி 2 ஆண்டுகளுக்கு, 4 லட்சத்து 81 ஆயிரத்து 75 மாணவிகள் மாதந்தோறும் ரூ.1,000 பெறுகிறார்கள். ‘நான் முதல்வன்’ திட்டத்தில் 2 ஆண்டுகளில், 28 லட்சம் இளைஞர்கள் பயனடைந்துள்ளார்கள். ‘இல்லம் தேடி கல்வித் திட்டத்தில்’ 24 லட்சத்து 86 ஆயிரம் பள்ளிப் பிள்ளைகள் பயனடைந்திருக்கிறார்கள். 62 லட்சத்து 40 ஆயிரம் குடும்பங்கள் புதிய குடிநீர் இணைப்பை பெற்றுள்ளன. 2 லட்சம் உழவர்கள் புதிய மின் இணைப்பு பெற்றுள்ளார்கள். உயர்த்தப்பட்ட ஓய்வூதியத்தை 30 லட்சம் முதியோர் மாதந்தோறும் பெறுகிறார்கள். உயர்த்தப்பட்ட ஓய்வூதியத்தை 5 லட்சம் மாற்றுத்திறனாளிகள் மாதந்தோறும் பெறுகிறார்கள். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தால் பயனடைந்தவர்கள் 42 லட்சத்து 33 ஆயிரம் பேர்.

- முதலமைச்சரின் ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீடு தொகை உயர்ந்த பிறகு பயன்பெற்றவர்கள் 20 லட்சத்து 55 ஆயிரம் பேர். மீன்பிடி கால உதவித்தொகை பெற்றவர்கள் 4 லட்சத்து 86 ஆயிரம் பேர். மீன்பிடி இல்லாதகால உதவித்தொகை பெற்றவர்கள் 5 லட்சத்து 15 ஆயிரம் பேர். ‘நம்மைக் காக்கும் 48’ திட்டத்தால் பயனடைந்தவர்கள் 2 லட்சம் பேர். ‘முதல்வரின் முகவரி திட்ட’த்தினால் பயனடைந்தவர்கள் 19 லட்சத்து 69 ஆயிரம் பேர்.

- ‘மக்களுடன் முதல்வர் திட்ட’த்தின் மூலமாக, 3 லட்சத்து 40 ஆயிரம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு உள்ளது. சமீபத்தில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட 45 லட்சம் குடும்பங்களுக்கு 6 ஆயிரம் மற்றும் ஆயிரம் என நிவாரணத் தொகை வழங்கி இருக்கிறோம். அதுமட்டுமல்ல, இந்த 33 மாதங்களில் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சிகளின் வாயிலாக 6 ஆயிரத்து 569 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பிலான உதவிகள் இலட்சக்கணக்கான மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## தலையங்கம்

# பிரதமர் ராஜினாமா செய்வாரா?

அரசியல் கட்சிகள் நன்கொடை பெறுவதற்காக ‘தேர்தல் பத்திரங்கள்’ என்ற நடைமுறையை 2018-ஆம் ஆண்டில் கொண்டு வந்தது ஒன்றிய பாஜக அரசு. உரிய விவாதம் கூட இல்லாமல் நிதி மசோதாவாக இந்த சட்டம் இயற்றப்பட்டது. அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்க விரும்பும் கார்ப்ரேட் நிறுவனங்கள், தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் இந்த நன்கொடையை வழங்கலாம். ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவில் வெளியிடப்படும் பத்திரங்களை பெற்று, அரசியல் கட்சிகளிடம் கொடுத்துவிட்டால், அந்த கட்சிகள் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவில் செலுத்தி பணமாக பெற்றுக்கொள்ளும். இதனை தேர்தல் ஆணையத்திற்கு தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை, பொதுமக்களுக்கு சொல்ல வேண்டிய தேவையில்லை என்றும் சட்டத்தில் ஏற்படுத்தினார்கள்.

இச்சட்டம் இயற்றப்பட்டபோது பெருநிறுவனங்கள் தங்களுடைய மூன்று ஆண்டு லாபத்தின் சராசரியில் 7.5% விழுக்காட்டுக்கும் மேல் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்க முடியாது என்ற வரம்பும் நீக்கப்பட்டது. அதாவது, நிறுவனங்களை மிரட்டிப் பணம் பறிப்பதற்கான அனைத்து வாய்ப்புகளையும் சட்டத்தின் வாயிலாகவே ஏற்படுத்தி வைத்தது பாஜக அரசு. எந்தெந்த கட்சிகளுக்கு எவ்வளவு நன்கொடை கிடைத்தது என்பதிலிருந்தே இதைப் புரிந்துகொள்ளலாம். தேர்தல் பத்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட 2018-இல் இருந்து 2022 ஆண்டு வரையிலான 5 ஆண்டு காலகட்டத்தில் அரசியல் கட்சிகள் அனைத்து வகையான நன்கொடைகள் மூலமாக 16,437 கோடி ரூபாய் பெற்றுள்ளன. அதில் தேர்தல் பத்திரங்கள் மூலம் மட்டும் 9,188 கோடி ரூபாய் பெற்றிருக்கின்றன.

இதில் பாஜக மட்டுமே 5,271 கோடி ரூபாய் பெற்றுள்ளது. 2022-23 ஒரு ஆண்டில் மட்டும் பாஜக 1,294 கோடி ரூபாய் பெற்றுள்ளது. பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் 171 கோடி ரூபாய் பெற்றுள்ளது. இவ்வளவு பணத்தை பாஜகவிற்கு யார் கொடுத்தார்கள் என்பது மக்களுக்கும், பிற அரசியல் கட்சிகளுக்கும் தெரியாது. பொதுத்துறை வங்கியான எஸ்.பி.ஐ.க்கு மட்டுமே தெரியும். ஆனால் எதிர்க்கட்சிகளுக்கு யார் நிதி கொடுக்கிறார்கள் என்பதை அரசால் தெரிந்துகொள்ள முடியும். அதனால்தான் எதிர்க்கட்சிகளுக்கும் ஆளுங்கட்சிக்கும் நிதி கிடைப்பதில் மலையளவுக்கான வித்தியாசம் இருக்கிறது.

எனவே இந்த மோசடிச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்று ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் உள்ளிட்ட தரப்புகளில் இருந்து வழக்கு தொடரப்பட்டிருந்தது. அந்த வழக்கில் தற்போது தீர்ப்பளித்துள்ள உச்சநீதிமன்றம், “தேர்தல் பத்திரங்கள் நடைமுறை அரசியல் சாசனத்திற்கு எதிரானது. தேர்தல் பத்திரங்கள் நடைமுறையானது அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமையான பிரிவு 19(1)(a)-ஐ மீறுவதாக உள்ளது. கம்பெனிகள் சட்டத்தில் அவர்களின் நன்கொடை வரம்பில் திருத்தங்களை மேற்கொண்டது அரசியல் சாசனத்திற்கு முரணானது. எஸ்.பி.ஐ வங்கி தேர்தல் பத்திரங்களை விநியோகிப்பதனை நிறுத்த வேண்டும். இன்னும் பணமாக மாற்றப்படாமல் தேர்தல் கட்சிகள் கையில் வைத்திருக்கும் பத்திரங்களை உடனடியாக திருப்பி அளிக்க வேண்டும். மார்ச் 13, 2024 தேதிக்கு உள்ளாக தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை அளித்தவர்களின் விவரங்களை வெளியிட வேண்டும்.” என்று கூறியுள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிவிட்ட இச்சூழலில், பாஜகவின் மோசடித்தனத்தை அம்பலப்படுத்தும் வகையில் இத்தீர்ப்பு அமைந்துள்ளது.

பாஜகவுக்கு நிதி கொடுத்தவர்கள் யார் என்ற சில முக்கிய விவரங்களை ‘நியூஸ் லாண்டரி’ ஊடகம் வெளியிட்டிருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் கொடுத்த நன்கொடை அனைத்துமே 1 கோடி ரூபாய்க்கும் அதிகமானவை. குறைந்தபட்சமாக சுமார் 30 நிறுவனங்கள் பாஜகவுக்கு 335 கோடி ரூபாயை நன்கொடையாக வழங்கியிருக்கின்றன. இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், இந்நிறுவனங்கள் அனைத்துமே ஒன்றிய அரசு நிறுவனங்களான அமலாக்கத்துறை, வருமான வரித்துறை போன்ற அமைப்புகளின் சோதனைகளுக்கு அல்லது நடவடிக்கைகளுக்கு ஆளாகியுள்ளன.

சில நிறுவனங்கள் சோதனைகளுக்கு பிறகு அதிக நிதி கொடுத்துள்ளன. நிதியே கொடுக்காத சில நிறுவனங்கள் சோதனை நடந்த உடனே நிதி கொடுத்திருக்கின்றன. மத்தியப் பிரதேசத்தை சேர்ந்த டிஸ்டில்லரி நிறுவனம் ஒன்று, அதன் உரிமையாளருக்கு பிணை கிடைத்த மறுநாளே நன்கொடை கொடுத்திருக்கிறது. ஆக, நிறுவனங்களை மிரட்டி லஞ்சமாக பணம் வாங்க, தேர்தல் பத்திரங்கள் என்ற சட்டத்தை பாஜக கொண்டு வந்தது என்பது ஆதாரப்பூர்வமாக அம்பலமாகியிருக்கிறது. இத்தகைய மெகா மோசடியை நடத்தியிருக்கிற பாஜக அரசு, தங்களை ஊழலற்றவர்கள் என்றும், வெளிப்படைத்தன்மையானவர்கள் என்றும் கூறிக்கொள்வது எவ்வளவு அபத்தமானது என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். இந்த மெகா மோசடிக்கு பொறுப்பேற்று பிரதமர் நரேந்திர மோடியும், ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனும் பதவி விலக வேண்டுமென்ற கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.

ஏற்கெனவே பாஜக ஆட்சியில் நடைபெற்ற ஏழரை லட்சம் கோடி ரூபாய் அளவுக்கான ஊழல்களை சி.ஏ.ஜி. அறிக்கைகள் அம்பலப்படுத்தியிருக்கின்றன. இப்போது தேர்தல் பத்திரங்கள் மூலம் பாஜக செய்திருக்கிற மோசடிகளும் அம்பலமாகியிருக்கின்றன. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மக்களிடம் இவற்றை கொண்டுசேர்க்கிற முயற்சியில் எதிர்க்கட்சிகளும், ஜனநாயக அமைப்புகளும் ஈடுபட வேண்டும். அதன்மூலம் பாஜக ஆட்சி அகற்றப்பட வேண்டும்!

## ஜாதி மறுப்பு இணையர்களுக்கு மதுரையில் பாராட்டு விழா



மதுரை : காதலர் தினத்தையொட்டி மதுரை மாவட்டக் கழக சார்பில் ஜாதி மறுப்பு இணையர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. நிகழ்வில் வாசுகி வரவேற்புரையாற்றினார், மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி முன்னிலை வகித்தார். மாவட்டச் செயலாளர் மா.பா.மணி அமுதன் தலைமை தாங்கினார்.

ஆதித்தமிழர் கட்சித் தலைவர் கு.ஜக்கையன், அதிமுக பொதுச் செயலாளர் பசும்பொன்.பாண்டியன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாநில துணைப் பொதுச் செயலாளர் வெ.கனியமுதன், தமிழ்ப்புலிகள் கட்சி தென்மண்டல பொறுப்பாளர் கனகராஜ் ஆகியோர் உரையாற்றினார்..

முன்னதாக ஜாதி மறுப்பு இணையர்களுக்கு தமிழ்தேச மக்கள் முன்னணித் தலைவர் மீ.த.பாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் இன்குலாப் ஆகியோர் நினைவுப் பரிசினை வழங்கினர்.

தொடர்ந்து ஜாதி மறுப்பு இணையேற்பு நடத்தி சட்ட போராட்டம் நடத்தும் தோழர்களான கழகத் தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈஸ்வரனுக்கு ஆதித்தமிழர் கட்சி தலைவர் ஜக்கையன் நினைவுப் பரிசு வழங்கினார்.

தமிழ்நாடு ஜாதி மறுப்பு இணையர் நலச் சங்க செயலாளர் ரமேசு பெரியாருக்கு அதிமுக பொதுச் செயலாளர் பசும்பொன் பாண்டியன் நினைவுப் பரிசு வழங்கினார்..

விழாவில் பங்கேற்ற ஜாதி மறுப்பு இணையர்கள் மற்றும் ஜாதி மறுப்புத் திருமணம் செய்து வைக்கும் தோழர்கள் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். நிகழ்வில் ஜாதி மறுப்பு இணையர்கள், கண்ணன் காமாட்சி, பரத், மருது பாண்டி, முருகேசன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

## மிருகத்துக்கும் மதச்சாயம்

மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள உயர்நீதிமன்றத்தில் விஷ்வ இந்து பரிசத் அமைப்பு வழக்கு ஒன்றை தொடர்ந்திருக்கிறது. அம்மாநிலத்தில் சிலிகுரி என்ற பகுதியில் பெங்கால் சவேரி என்ற உயிரியல் பூங்கா உள்ளது. அந்த பூங்காவில் ஆண் சிங்கத்துக்கு அக்பர் என்றும், பெண் சிங்கத்துக்கு சீதா என்றும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த இரண்டு சிங்கங்களும் திரிபுராவில் இருந்து வந்தவை. இதற்கு திரிபுராவிலேயே பெயர் சூட்டப்பட்டுவிட்டது. ஆண் சிங்கத்துக்கு அக்பர் என்ற இஸ்லாமியப் பெயரையும், பெண் சிங்கத்துக்கு சீதா என்ற ராமாயண பாத்திரப் பெயரையும் சூட்டியிருப்பது இந்துக்களின் மனதைப் புண்படுத்தும் விதமாக இருக்கிறது. எனவே பெண் சிங்கத்தின் பெயரை மாற்ற வேண்டும் என்பதுதான் விஷ்வ இந்து பரிசத் அமைப்பின் கருத்து.

அக்பர் ராமாயணத்துக்கு எதிரானவரா? இந்துமதத்துக்கு எதிரானவரா? என்பதையும் வரலாற்றுரீதியாக நாம் சிந்திக்க வேண்டிய தேவை இருக்கிறது. ராமாயணத்தை சமஸ்கிருத மொழியில் இருந்து பாரசீக மொழிக்கு மொழிப்பெயர்க்க வேண்டும் என்று உத்தரவிட்ட மன்னர் தான் அக்பர். உத்தரவிட்டது மட்டுமின்றி பாரசீக மொழியில் ராமாயணத்தை விரும்பி படித்தார். அதற்கு ஜெய்ப்பூர் மேனேஸ்க்ரிட் என்று பெயர் சூட்டப்பட்டது. அக்பரின் தாயாரான ஹமிதா பானுவும் வால்மீகி ராமாயணத்தை விரும்பி படித்தார். 1604இல் அவர் மரணமடையும் வரை அவர் பாரசீக மொழியில் ராமாயணத்தை படித்துக் கொண்டே இருந்தார். அவர் படித்த அந்த ராமாயணத்தின் பிரதி இப்போதும் கத்தார் நாட்டின் தோஹாவில் உள்ள அருங்காட்சியகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. 1604ஆம் ஆண்டு இந்த அருங்காட்சியகம் உருவாக்கப்பட்டது என்பது வரலாறு. டைம்ஸ் ஆஃப் இந்தியா ஆங்கில நாளேட்டில் (பிப் 11) இந்த வரலாற்றுச் செய்திகள் இடம்பெற்றிருக்கிறது.

அபுதாபி என்ற இஸ்லாமிய நாட்டில் தங்களது கருத்துகளுக்கு உடன்பாடு இல்லை என்றாலும் கூட இந்து கோயிலை கட்ட அந்த நாடு அனுமதித்து உள்ளது. உருவ வழிபாட்டின் பெருமையை பேச ஒரு அமைச்சர் முன்னிலையில் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதை அவர்கள் சகித்துக் கொண்டார்கள். ஆனால் இங்கே ஒரு உயிரியல் பூங்காவில் விலங்குகளில் ராமன், சீதை என்று இருப்பதைக் கூட இந்தமத வெறுப்பாக மாற்றும் அமைப்பாக விஷ்வ இந்து பரிசத் இருக்கிறது. கடவுள் – மதம் – ஜாதி இவைகளுக்கு அப்பாற்பட்ட விலங்குகளை கூட ஜாதியையும், ஆண் பெண் பேதத்தையும் திணிக்கும் ஒரு பண்பாடு தான் சனாதானப் பண்பாடு இருக்கிறது. இதுதான் இவர்கள் பேசுகிற இந்து பாரம்பரிய பண்பாடு என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

## வினா விடை

• *பழனி கோயில் கொடி மரத்தின் அருகே இந்துக்கள் அல்லாதவர்கள் நுழைய அனுமதி இல்லை என்று அறிவிப்பு பலகை வைக்க வேண்டும்*
**– மதுரை உயர்நீதிமன்ற கிளை நீதிபதி தீர்ப்பு**

*பழனி கோயிலில் கொடிமரமே கிடையாது என்கிறார் ஆன்மீகப் பேச்சாளர் சுகி.சிவம். பாஜக கொடிமரம் ஒன்றை நட்டு, அறிவிப்பு பலகையை தொங்கவிடலாமா?*

• *இஸ்லாமிய நாடான அபுதாபியில் அரசர் ஆதரவோடு இந்து கோயிலை திறந்து அங்கே நாட்டின் பெருமையை பேசினார் மோடி* **– செய்தி**

*அங்கே கோயில் கட்டுவார்கள், இங்கே மசூதி இடிப்பார்கள்*

• *உலகிலேயே ‘விதவைகள்’ அதிகம் வாழும் நாடு இந்தியா*
**– உலக பொருளாதார மன்றம்**

*ஆளுநரே! உங்கள் சனாதனப் பெருமையில் இதையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.*

• *ஆண் சிங்கத்துக்கு அக்பர் பெயர்; பெண் சிங்கத்துக்கு சீதை பெயரா? ‘இந்து’க்களை புண்படுத்துகிறார்கள்* **– விஷ்வ இந்து பரிசத் வழக்கு**

*‘சிங்கங்களுக்கு’ ஜாதி, மதம் கிடையாது. “அசிங்கங்கள்” தான் இதற்கு நீதிமன்றம் ஓடும்*

# வந்திடுச்சு; ராமராஜ்ஜியம் வந்துடுச்சு

*"பங்கஜம் இனி நம்மளவா ஆட்சி தான்டீ. ராமன் கோயில் திறந்த அந்த நிமிஷத்திலேயே ராமராஜ்ஜியம் வந்திருச்சு. அமித்ஷா இதை அறிவிச்சுட்டாரு, இனி ஆயிரம் ஆண்டு ராமராஜ்ஜியம் தான் என்று அவரே கூறிட்டாரு. பாஜக தேசியக் குழு தீர்மானமே போட்டுடுச்சுடீ. போய் பால் பாயாசம் கொண்டு வா" இப்படி ஆனந்தக் கூத்தாடி இருக்கும் ஒரு கூட்டம். அவர்களுக்கு பல பெயர்கள் உண்டு. சமூக ஆர்வலர்கள், வலதுசாரி, அரசியல் ஆய்வாளர், பாஜக, இந்து முண்ணனி என்று பல பல முகமூடிகளில் வருவார்கள். தொலைக்காட்சி விவாதங்களில் பங்கேற்பார்கள். எதிர்த்து பேசுபவர்களின் நெத்தியடி கேள்விகளால் திக்குமுக்காடினாலும் கூச்சல் போட்டு மடைமாற்றம் செய்துவிடுவார்கள்.இவர்களெல்லாம் யார்? ஒற்றை இந்தியாவைப் போல ஒற்றை வரியில் சொல்லப்போனால் சங்கிகள்.*

*பாமர வாக்காளர்களுக்கு தலை சுற்றுகிறது. அவர்களுக்கு பல சந்தேகங்கள் வந்துவிட்டன. சங்கிகள் என்ன கூறுகிறார்கள், பாமர மக்கள் என்ன நினைக்கிறார்கள். இருவரும் நேருக்கு நேராக சந்தித்தால்... ஒரு உரையாடல்*

***பாமர வாக்காளன் :*** *ஜீ, ராமராஜ்ஜியம் என்றால் அது என்னவென்றே எங்களுக்கு தெரியவில்லையே.*

***சங்கி :*** *அதுவா கூறுகிறேன் கேள். கோசலா என்ற பகுதியை அயோத்தியை தலைநகரமாகக் கொண்டு ராமன் ஆட்சி செய்தான். அந்த ஆட்சி பத்தாயிரம் ஆண்டுகள் நடந்தது. வானம் மும்மாரி பொழிந்தது. மக்களுக்கு நோய் நொடி எதுவுமில்லை. சுற்றுச்சூழல் பாதிப்பு எதுவுமில்லை. இதற்கெல்லாம் காரணம் ராமன் பிராமணர்களை அழைத்து யாகம் நடத்தியது தான். ஒரே ஒருமுறை மட்டும் ஒரு தவறு நடந்துவிட்டது. ஒரு பிராமணன் வீட்டில் பச்சிளம் குழந்தை பிறந்தவுடன் இறந்துவிட்டது. கொதித்தெழுந்தான் அந்த பிராமணன். நேராக ராமனிடம் போனான். ராமா? இந்த ஆட்சியில் ஏதோ தவறு நடக்கிறது. அந்த தவறுக்கு நீ உடந்தையாகிவிட்டாய். தர்மம் மீறி நடப்பதை நீ தட்டிக்கேட்க மாட்டாயா? என்னுடைய வீட்டில் பிறந்த குழந்தை உடனே இறந்துவிட்டது. இந்த சாவுக்கு நீதான் பொறுப்பேற்க வேண்டும். உடனே என் குழந்தையை காப்பாற்று இல்லாவிட்டால் உன்னுடைய அரண்மனை வாயிலில் நானும் என் மனைவியும் உயிரைத் துறந்துவிடுவோம் என்று மிரட்டினான். பதறினான் ராமன். என்ன நடக்கிறது இங்கே என்று ஆவேசமடைந்தான்.*

*நாரதன் வந்தான், "நான் சொல்கிறேன் ராமா? ஒரு சூத்திரன் தனக்கு விதிக்கப்பட்ட கடமையை மீறி பிராமணர்கள் செய்யும் தவத்தை செய்து கொண்டிருக்கிறான். புரோகிதர்களை அவமதித்துவிட்டான் என்று நாரதன் கூறினான். அப்படியா? என்னுடைய ராஜ்ஜியத்தில் அப்படியா நடக்கிறது என்று பதறிய ராமன் "இலட்சுமணா இங்கே வா! இந்த பிராமண குழந்தையின் உடலை கெட்டுப் போகாமல் எண்ணெய் ஊற்றி அப்படியே வை. நான் அந்த சூத்திரனை கண்டுபிடித்து வதம் செய்து திரும்புகிறேன் என்று புறப்பட்டான். வலைவீசி தேடினான். ஓரிடத்தில் சம்பூகன் தலைகீழாகத் தொங்கி தவம் செய்து கொண்டிருந்ததை பார்த்தான். எந்த கேள்வியையும் கேட்கவில்லை, சம்பூகன் தலையை வெட்டி வீழ்த்தினான். உடனே செத்துப் போன பிராமண குழந்தை உயிர் பிழைத்துக் கொண்டது. தலையை வெட்டிய ராமன், அந்த தலையை தூக்கிக் கொண்டு காவல் நிலையத்துக்கு சென்றானா? சரணடைந்தானா? எப்.ஐ.ஆர், கிரிமினல் வழக்குகள் எதுவும் பதிவானதா? இல்லை. இவையெல்லாம் ராமராஜ்ஜியத்தில் கிடையாது. அங்கே நடந்தது வர்ணாசிரம ஆட்சி. பிராமண நிந்தனைக்கு எவன் உள்ளானாலும் மரண தண்டனை தான். இவற்றையெல்லாம் வால்மீகி ராமாயணம் உத்திரகாண்டம் 73வது சருக்கம் தெளிவாக விவரிக்கிறது.*

*சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட, பலருக்கும் தெரியாமல் மறைக்கப்பட்ட அந்த கருத்தை இப்போது நான் உள்ளது உள்ளபடி கூறியிருக்கிறேன்.இதுதான் ராமராஜ்ஜியம்.*

**வாக்காளன் :** *இப்போ புரியுது ஜீ. ஒரு சூத்திரன் செத்தால் பிராமண குழந்தை உயிர் பிழைக்கும். அவ்வளவு தானே நீங்கள் சொல்ல வருகிற செய்தி. சரி ராமராஜ்ஜியத்தில் நாடாளுமன்றம், எம்பி, எம்.எல்.ஏக்கள், கட்சித் தாவல்கள், ஆட்சிக் கவிழ்ப்புகள் எல்லாம் நடந்ததா? ஜீ. இப்போதெல்லாம் நடந்து கொண்டிருக்கிறதே?*

***சங்கி :*** *இந்த கேடுகெட்ட அமைப்புகள் எல்லாம் ராமராஜ்ஜியத்தில் கிடையாது. பிரிட்டிஷ்காரன் நம் தர்மத்தை சீர்குலைப்பதற்காகவே இவைகளை நம்மீது திணித்துவிட்டு போனான். நாம் அதை பிடித்து தொங்கிக் கொண்டு பிரிட்டிஷ் அடிமைகளாக இருக்கிறோம். ராமன் வனவாசம் போன போது கூட 14 ஆண்டுகள் ராமனின் 'பாதணி' (அதாவது இதை செருப்பு என்று தமிழில் கூறுவதுண்டு) தான் அரசு பீடத்தில் அமர்ந்து ஆட்சி செய்தது.*

**வாக்காளன் :** *ஓ அவ்வளவு புண்ணிய பூமியா ராமராஜ்ஜியம்? இப்போ மோடி - அமித்ஷா ராமராஜ்ஜியத்தில் நாடாளுமன்றம், தேர்தல் ஆணையம், நீதிமன்றம் என்று நீங்கள் கூறிய பிரிட்டிஷ் நடைமுறைகள் எல்லாம் தொடர்கிறதே?*

***சங்கி :*** *இவையெல்லாம் இருக்கும் ஆனால் இருக்காது.*

**வாக்காளன் :** *புரியவில்லையே ஜீ. கொஞ்சம் விவரமா பேசுங்க,*

***சங்கி :*** *நாட்டில் என்ன நடக்கிறது என்பது கூட உனக்கு தெரியாதா? இதையெல்லாம் நான் விவரமா சொல்லித் தொலைக்கனுமா? இப்போ நாடாளுமன்றக் கட்டடம் புதுசா கட்டிட்டோம். அது இருக்கு. ஆனால் நாடளுமன்றம் உயிருடன் இருக்கிறதா? அது இல்லை. ராம அவதாரம் எடுத்துள்ள மோடி என்றைக்காவது நாடாளுமன்றத்தில் கேள்விகளுக்கு பதிலளித்தது உண்டா? அவையில் அந்த நேரத்தில் இருந்தது உண்டா? புதிய நாடாளுமன்றத் திறப்பு விழாவுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை அழைத்தோமா? ஏன் அவர் ஒரு பெண் அதுவும் கணவனை இழந்தவர். சட்டத்தை பாதுகாக்கும் நாடாளுமன்றக் கட்டடத்தில் சனாதனத்தை பாதுகாத்தோமா? இல்லையா? சரி ஒரே நேரத்தில் 146 உறுப்பினர்களை சஸ்பெண்ட் செய்ய வைத்தோமே அது எதைக் காட்டுகிறது? நாடாளுமன்றம் உயிருடன் இல்லை என்பதற்குத் தானே. அப்படி அவர்களையெல்லாம் வெளியேற்றிவிட்டு அவசர அவசரமாக சட்டங்களை நிறைவேற்றினோமே, அப்போதே நாங்கள் நாடாளுமன்ற ஜனநாயகத்தை கருத்தில் கொள்ளவில்லை என்பதை நீ புரிந்து கொள்ளவில்லையா? இவையெல்லாம் ராமராஜ்ஜியத்தின் அடையாளங்கள்.*

*அதேபோலத்தான் மோடி ராமராஜ்ஜியத்தில் நீதிமன்றங்கள் இருக்கிறது. ஆனால் நீதிகள் கிடைக்காமல் தடுப்பதில் தீவிர முயற்சிகள் செய்துவருகிறோம். தேர்தல் ஆணையம் இருக்கிறது. அது எங்கள் கட்டுப்பாட்டில் தான். தேர்தல் அதிகாரிகளை வைத்தே எதிர்க்கட்சி ஓட்டுகளை செல்லாமல் காலி செய்து விடுவோம். சண்டிகர் மேயர் தேர்தலில் நீங்கள் பார்க்கவில்லையா?*

**வாக்காளன் :** *ராமராஜ்ஜியம் பிராமண ராஜ்ஜியம் என்று சொல்லுவது உண்மைதானா?*

***சங்கி :*** *சங்கடமான கேள்வியா இருக்கே சரி, உண்மையை சொல்லிவிடுகிறேன். உண்மையில் ராமராஜ்ஜியம் பிராமண ராஜ்ஜியம் தான் ஆனால் நாங்கள் அதை ஏழைகள் ராஜ்ஜியம் என்று பொய் சொல்லி மக்களை ஏமாற்றிக் கொண்டுள்ளோம். உண்மையைச் சொன்னால் சூத்திர பஞ்சம ஓட்டுகள் எங்களுக்கு கிடைக்குமா? ராமராஜ்ஜியம் எப்படி நடந்தது என்பதைப் பற்றி சில ரகசியங்களை சொல்கிறேன் கேட்டுக்கொள்.*

*ராமன் பிராமணர்களை கடவுளாக வணங்கினான். அவனுக்கு ஆலோசகர்களாக இருந்தவர்கள் எல்லாம் எங்கள் பிராமண மூதாதையர்கள் தான். காட்டுக்குள் செல்லும் போது கூட அவன் பிராமணர்களை மட்டும் அழைத்தான். தான் அணிந்திருந்த தங்க நகைககளையும், மனைவி சீதா அணிந்திருந்த தங்க நகைகளையும் பிராமணர்களுக்கு தானமாக வழங்கி அவர்களின் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்றுதான் காட்டுக்கு போனான். பரதன் தன்னை காட்டுக்குள் சந்திக்க வந்த போது கேட்ட முதல் கேள்வி, ஆட்சியில் பிராமணர்களுக்கு ஏதும் தொல்லை இல்லையே, அவர்களை கவனமாக பார்த்துக் கொள். நமது ராஜ்ஜியத்தில் திருடர்கள் புத்தன் என்ற பெயரில் ஊடுறுவி இருப்பார்கள். அவர்களை அழித்துவிடு, எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று ராமன் அறிவுரை கூறினான். இவையெல்லாம் வால்மீகி ராமாயணத்தில் இருக்கிறது. அதை தமிழில் எழுதிய கம்பன் இந்த செய்திகளை எல்லாம் மூடிமறைத்து தமிழ்நாட்டு மக்களின் காதில் பூ சுற்றிவிட்டான். சீதை அக்னி பிரவேசம் செய்ததையோ, ராமனின் பிள்ளைகள் - சீதை தற்கொலை செய்து கொண்டதையோ கம்பராமாயணம் கூறவில்லை. உத்தரகாண்டத்தையே அவன் நீக்கிவிட்டான். ஆனால் அப்பாவி சூத்திரர்கள் கம்பன் காவியத்தை புகழ்ந்து தள்ளுகிறார்கள். வால்மீகி ராமாயணத்தை மறைத்து கம்பராமாயணத்தை தமிழ்நாட்டு மக்களிடம் திணித்து ராமனை அவதாரமாக்கி இப்போதும் ராமராஜ்ஜியத்தை பேசிக்கொண்டு எங்கள் பிராமண தர்மத்தை காப்பாற்றிக் கொண்டு இருக்கிறோம். இவையெல்லாம் ரகசியம், வெளியில் போய் யாரிடமும் சொல்லிவிடாதே..*

**வாக்காளன் :** *சரி, ராமராஜ்ஜியத்தை மேலும் வலிமையாக்க அடுத்த என்னென்ன திட்டங்கள் வைத்துள்ளீர்?*

***சங்கி :*** *அப்படி கேள், முதலில் தமிழ்நாட்டில் எங்களுக்கு சவாலாக இருக்கும் திராவிட மாடலை ஒழிப்போம். தமிழ்நாட்டை மூன்று மாநிலங்களாக உடைப்போம். ஜம்மு - காஷ்மீரை பார்க்கவில்லையா? திராவிடத்துக்கு சமாதி கட்ட அது ஒன்றுதான் வழி. மூன்று மாநிலங்களிலும் ஜாதித் தலைவர்கள் முதல்வர்களாக வந்துவிடுவார்கள். பிறகு வர்ணாசிரமம் வந்துவிடும், பிறகு ராமராஜ்ஜியம் தான். தேசியக் கல்விக் கொள்கைகளை திணிப்போம், நீட் தேர்வை தொடக்கப் பள்ளியிலேயே அறிமுகப்படுத்துவோம். சமஸ்கிருதம் - இந்தியை கட்டாயமாக்குவோம். மக்களை ஏமாற்ற தமிழின் பெருமையை அவ்வப்போது வாயால் மட்டும் பேசுவோம்.*

*மாநிலங்களே இருக்காது. அதிபர் ஆட்சி வரும். ராணுவத்தில் முப்படை தளபதிகளை அகற்றிவிட்டு ஒரே தளபதியின் கீழ் கொண்டுவந்துவிட்டோம்.தேசபக்தர்களான அம்பானி - அதானியிடம் நாட்டின் தொழில் துறையை முழுமையாக ஒப்படைத்துவிடுவோம். உயர்ஜாதி ஏழைகளுக்கான இட ஒதுக்கீட்டை 10 சதவீதத்தில் இருந்து 69 சதவீதமாக உயர்த்துவோம். உயர்கல்வி - உயர் பதவிகளில் சூத்திரர் பஞ்சமர்கள் நுழைந்துவிடாமல் இப்போது எங்கள் பிரதமர் அலுவலகத்தில் இருப்பது போல பாதுகாப்போம். கோயில்களை அறநிலையத்துறையிடம் இருந்து மீட்போம், பாஜகவினரிடம் அதை ஒப்படைப்போம். கிரிமினல் குற்றவாளிகளாக இருந்து எங்கள் கட்சியில் இணைந்த தேசபக்தர்கள் அதை பராமரிப்பார்கள். இலவசங்களை ஒழித்துக் கட்டுவோம். இப்படி எண்ணற்றத் திட்டங்கள் எங்கள் கைவசம் உள்ளது.*

**வாக்காளன் :** *அடேய் ஜீ, நிறுத்துடா..*

***சங்கி :*** *என்ன மரியாதை குறையுது*

**வாக்காளன் :** *'இதுக்கு மேல உனக்கு மரியாதை வேண்டுமாடா' என்று ஆத்திரம் கொப்பளிக்க தனது காலில் இருந்த செருப்பைக் கழட்டுகிறான். டேய், இது ராமன் பாதணி அல்ல, பாமர வாக்காளனின் செருப்பு. இதை தலையில் சுமக்கப் போகிறேனா? அல்லது ஆயுதமாக்கப் போகிறேனா? என்பதை வருகிற தேர்தலில் உனக்கு உணர்த்துவோம்.*

***இன்று போய் நாளை (தேர்தல் முடிந்த பிறகு) வா...***

கோடங்குடி மாரிமுத்து

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# பரப்புரையில் பம்பரமாய்ச் சுழலும் திண்டுக்கல் - சென்னை மாவட்டங்கள்

**திண்டுக்கல் :** திண்டுக்கல் மாவட்டக் கழக சார்பில் 2024 பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! பரப்புரை இயக்கம் 11.02.2024 அன்று நெய்காரபட்டி, காவலப்பட்டி, வேலாயுதம்பாளையம் புதூர், பாப்பம்பட்டி, ஆண்டிபட்டி, அய்யம்பாளையம், வயலூர், மிடாப்பாடி, குமாரபாளையம், குருவன்வலசு, தாழையூத்து, சின்னக்கலையம்புத்தூர், மானூர், நரிக்கல்பட்டி, மேல்கரைப்பட்டி, கீரனூர், தொப்பம்பட்டி, வாகரை, புளியம்பட்டி, அமரபூண்டி, விருப்பாச்சி, சத்திரப்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, மாட்டுப்பாதை, கணக்கன்பட்டி, பொருளூர், கள்ளிமந்தயம், கொ.கீரனூர், I.வாடிப்பட்டி, சக்கம்பட்டி, சிந்தலப்பட்டி, அம்பிளிக்கை, இடையகோட்டை, மார்கம்பட்டி, சின்னக்காம்பட்டி, வெரியப்பூர், கேதையறும்பு, லெக்கயன்கோட்டை, அத்திக்கோம்பை, தும்பிச்சம்பட்டி, ஒட்டன்சத்திரம் இரயில் நிலையம், ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையம், மூலச்சத்திரம், ஸ்ரீராமபுரம், கன்னிவாடி, தருமத்துப்பட்டி, ஆத்தூர், சித்தயன்கோட்டை, செம்பட்டி உள்ளிட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் சுமார் பத்து நாட்களாக தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றது.



புளியம்பட்டியில் நடைபெற்ற கூட்டத்தை கவனித்த பெரியார் தொண்டர் ஒருவர் மாலை ஒன்றை வாங்கி பெரியார் படத்திற்கு மாலை அணிவித்த நிகழ்வு நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

அனைத்துக் கூட்டங்களில் பெரியார் - மாக்சிம் கார்க்கி ஆகியோர் பரப்புரையை விளக்கிப் பாடினர்.

முனைவர் உஷாராணி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மாக்சிம் கார்க்கி, மாவட்ட இணையதள பொறுப்பாளர் ராஜா, ஆயக்குடி பேரூர் அமைப்பாளர் சங்கர், மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி ஆகியோர் கருத்துரையாற்றினர்.

தேனி ராயன், நத்தம் குமார், தங்கமுத்து, சூர்யா, லோகேஷ், அலெக்ஸ், இளம்பரிதி, ஆரியா, லல்லு பிரசாத், சந்தோஷ் துர்க்கைராஜ், குமார், ஆயுதன் ஆகியோர் பங்கேற்றனர்.

**திருப்பூர் :** திருப்பூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் வருகிற 2024 பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! பரப்புரை இயக்கம் 14.02.2024 அன்று திருப்பூர் ரயில் நிலையம் அருகில் உள்ள பெரியார் - அண்ணா சிலை அருகே தொடங்கியது.




இந்நிகழ்விற்கு கழக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் முகில் இராசு முன்னிலை வகித்தார்.

சிபிஎம் மாநகரச் செயலாளர் நந்தகோபால், விசிக மாநகர் மாவட்ட செயலாளர் ஏ.பி ஆர் மூர்த்தி, துணைப் பொதுச் செயலாளர் துரைவளவன், ஆதித்தமிழர் பேரவையின் துணைப் பொதுச் செயலாளர் விடுதலைச் செல்வன், புரட்சிகர இளைஞர் முன்னணி பொறுப்பாளர் தமிழ் அமுதன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரையாற்றினர். நிறைவாக கழகப் பொருளாளர் சு.துரைசாமி சிறப்புரையாற்றினார்.

நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, தெற்கு பகுதி பொறுப்பாளர் ராமசாமி, 15 வேலம்பாளையம் பொறுப்பாளர் மாரிமுத்து, பல்லடம் சண்முகம், ராஜ்குமார், அய்யப்பன், ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து அவிநாசி பேருந்து நிலையம், திருப்பூர் புதிய பேருந்து நிலையம், பெருமாநல்லூர் உள்ளிட்ட இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றது.

இதில் சங்கீதா, திருப்பூர் மகிழவன், பரிமளராசன், முத்து ஆகியோர் பரப்புரையை விளக்கி உரையாற்றினர்.

தொடர்ந்து 15.02.2024 அன்று கூலிபாளையம் நால் ரோடு, ராக்கியாபாளையம் பிரிவு, இடுவம்பாளையம் உள்ளிட்ட இடங்களிலும், 16.02.2024 அன்று பொங்கலூர், பல்லடம் என்.ஜி.ஆர் சாலை, காரணம்பேட்டை, பல்லடம் லட்சுமி மில் சாலை உள்ளிட்ட இடங்களில் நடைபெற்றது.

கூட்டங்களில் மாதவன், அய்யப்பன், இராமசாமி, சரஸ்வதி, செம்பருதி, சண்முகம், கோவிந்தராஜ், பழனிச்சாமி, அஜீத், மாரிமுத்து, சிரீஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சென்னை :** சென்னை மாவட்டக் கழக சார்பில் சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! என்ற முழக்கத்தோடு 2024 நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரை இயக்கத் தெருமுனைக் கூட்டங்கள் ஜாம் பஜார் தேவராஜ் தெரு, திருவல்லிக்கேணி மேயர் சிட்டிபாபு தெரு, மயிலாப்பூர் அம்பேத்கர் பாலம், கோட்டூர்புரம் மார்க்கெட், கலிக்குன்றம் அம்பேத்கர் சிலை, ஆயிரம் விளக்கு மாடர்ன் பள்ளி, அண்ணா நகர் எம்ஜிஆர் காலனி, திருமங்கலம் டிவி நகர் உள்ளிட்ட இடங்களில் பிப்ரவரி 13 முதல் பிப்ரவரி 19 வரை நடைபெற்றது.

உமாபதி - பொன்ராஜ் குழுவின் அரசியல் நையாண்டி நிகழ்ச்சி மற்றும் மக்களிசை பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது. ஈரோடு பேரன்பு ராப் பாடல்களை பாடினார்.

அதனைத் தொடர்ந்து கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், ஜெயபிரகாஷ், பெரியார் நம்பி, தேன்மொழி, எட்வின் பிரபாகரன், ஊடகவியலாளர் மாதூர் சத்யா ஆகியோர் கருத்துரையாற்றினர்.

**சேலம் :** சேலம் மாவட்டக் கழக சார்பில் சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! என்ற முழக்கத்தோடு 2024 நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரை இயக்கத் தெருமுனைக் கூட்டம் 18.02.2024 அன்று ஏற்காடு ஒன்றியத்திற்குட்பட்ட ஏற்காடு டவுன், ஒண்டிக்கடை அண்ணா சிலை, முளுவி உள்ளிட்ட இடங்களில் நடைபெற்றது.

மேட்டூர் டி.கே.ஆர். இசைக்குழுவின் பறை இசை மற்றும் பகுத்தறிவு பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது.

கூட்டத்திற்கு கழக ஏற்காடு ஒன்றிய செயலாளர் கார்த்திகேயன் தலைமை தாங்கினார், சேலம் (கி) மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏற்காடு தேவபிரகாஷ் வரவேற்புரையாற்றினார், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு, ஏற்காடு தமிழ்ச்செல்வி, நான்சி, சரிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஏற்காடு திமுக ஒன்றிய செயலாளர் கே.வி.ராஜா (எ) ராஜேந்திரன், NP செந்தில்குமார் மாவட்ட துணை அமைப்பாளர் (நெசவாளர் அணி) திமுக, ஏற்காடு சுதந்திரா, நித்யஸ்ரீ, ஆசிரியர் தேவதாஸ் மற்றும் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர் ஏற்காடு பெருமாள் ஆகியோர் பரப்புரைக் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி சிறப்புரையாற்றினார்கள்.

தமிழினி நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

கூட்டத்தில் வெள்ளைக்கடை முன்னாள் கவுன்சிலர் ஈசுவரன், சேலம் கிழக்கு மாவட்ட சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் சார்லஸ், ஏற்காடு ஊராட்சி 3வது வார்டு உறுப்பினர் செஞ்சி மாணிக்கம், தகவல் தொழில்நுட்ப ஏற்காடு சட்டமன்ற ஒருங்கிணைப்பாளர் ஆதி சங்கர், இளைஞர் அணி வெங்கடேஷ், திருமூர்த்தி, நிர்வாகிகள் கோபி மற்றும் திராவிடர் விடுதலைக் கழக தோழர்கள் ஏற்காடு பகுதி செல்வமூர்த்தி, உலகநாதன், ஆனந்தராசு, சேகுவேரா, எழில், ஜாஸ்மின்ஸ்ரீ, சுதாகர், சுகாசினி, ராணி சந்திரா, இளம்பிள்ளை பகுதி தங்கதுரை, கோபி, திவ்யா, நங்கவள்ளி கிருஷ்ணன், பிரபாகரன், சந்திரசேகர், உமா சங்கர், பேரறிவாளன், அமுதன், மேட்டூர் பகுதி கிட்டு, முத்துராஜ், குமரப்பா, காளியப்பன், ஆர்.எஸ்.பகுதி நாகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கோவை :** சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! என்ற முழக்கத்தோடு 2024 நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரை இயக்கத் தெருமுனைக் கூட்டம் 19.02.2024 அன்று மேட்டுப்பாளையம் சிவம் தியேட்டர் அருகில் ரங்கராஜ் தலைமையில் நடைபெற்றது.

RD தாம்பூலம் குழுவினரின் பறை இசை நிகழ்ச்சி மற்றும் புரட்சி தமிழன் - கிருஷ்ணன் ஆகியோரின் பரப்புரைப் பாடல்கள் மற்றும் நிர்மல் குமார் - புரட்சி தமிழன் குழுவின் அரசியல் நையாண்டி நிகழ்ச்சிகளுடன் கூட்டம் தொடங்கியது.

திருப்பூர் மகிழவன், குட்டையூர் கந்தசாமி, திமுக நகரச் செயலாளர் முனுசாமி, மாவட்டத் தலைவர் இராமச்சந்திரன், திராவிடர் கழக கோவை மாவட்ட தலைவர் வேலுச்சாமி ஆகியோர் கருத்துரையாற்றினர்.

நிறைவாக கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி ஆகியோர் இந்தியாவின் பன்முகத்தன்மையை சிதைக்கும் மோடி ஆட்சியை விரட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி சிறப்புரையாற்றினர்.

மனோரஞ்சனி நன்றி கூறினார். மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், அமுல்ராஜ், நிர்மல்குமார் கூட்டத்தை ஏற்பாடு செய்தது குறிப்பிடத்தக்கது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : February 23, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran